## செப்டம்பர் – 20 – வியாழன்

### புனித அந்திரேயு போல் மற்றும் நண்பர்கள்

### “என் இறைவன் நீரே! உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்”– திபா 118:28

**முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 15 : 1 - 11**

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு நான் அறிவித்த நற்செய்தியை நினைவுறுத்த விழைகிறேன். அதை நீங்களும் ஏற்றுக் கொண்டீர்கள் அதிலே நிலைத்தும் நிற்கிறீர்கள். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியை நீங்கள் உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தால் அதன்வழியாக மீட்பு அடைவீர்கள் இல்லையேல் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பொருளற்றதே. நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக்கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ள வாறு கிறிஸ்து நம்பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம்நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரேநேரத்தில் தோன்றினார். அவர்களுள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றனர் சிலர் இறந்துவிட்டனர். பிறகு யாக்கோபுக்கும் அதன்பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப்பிறந்த குழந்தைபோன்ற எனக்கும் தோன்றினார். நான் திருத்தூதர்களிடையே மிகக்கடையவன். திருத்தூதர் என அழைக்கப்பெறத் தகுதியற்றவன். ஏனெனில் கடவுளின் திருச்சபை யைத் துன்புறுத்தினேன். ஆனால் இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான். அவர் எனக்களித்த அருள் வீணாகிவிடவில்லை. திருத்தூதர்கள் எல்லாரையும்விட நான் மிகுதியாகப் பாடுபட்டு உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை. என்னோடிருக்கும் கடவுளின் அருளே அவ்வாறு உழைக்கச் செய்தது. நானோ மற்றத்திருத்தூதர்களோ யாராயி ருந்தாலும் இதையே பறைசாற்றுகிறோம். நீங்களும் இதையே நம்பினீர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில்
அவர் நல்லவர்.

**நற்செய்தி : லூக்கா 7 : 36 - 50**

அக்காலத்தில் பரிசேயருள் ஒருவர் இயேசுவைத் தம்மோடு உண்பதற்கு அழைத்திருந்தார். அவரும் அந்தப்பரிசேயருடைய வீட்டிற்குப்போய்ப் பந்தியில் அமர்ந்தார். அந்நகரில் பாவியான பெண் ஒருவர் இருந்தார். இயேசு பரிசேயருடைய வீட்டில் உணவு அருந்தப் போகிறார் என்பது அவருக்குத் தெரியவந்தது. உடனே அவர் நறுமணத்தைலம் கொண்ட படிகச்சிமிழைக் கொண்டு வந்தார். இயேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அவர் அழுதுகொண்டே நின்றார் அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து, தம்கூந்தலால் துடைத்து, தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத்தைலம் பூசினார். அவரை அழைத்த பரிசேயர் இதைக்கண்டு, ”இவர் ஓர் இறைவாக்கினர் என்றால், தம்மைத்தொடுகிற இவள் யார், எத்தகையவள் என்று அறிந்திருப்பார் இவள் பாவியாயிற்றே” என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார். இயேசு அவரைப்பார்த்து, ”சீமோனே, நான் உமக்கு ஒன்றுசொல்லவேண்டும்” என்றார். அதற்கு அவர், ”போதகரே, சொல்லும்” என்றார். அப்பொழுது அவர், ”கடன் கொடுப்பவர் ஒருவரிடம் ஒருவர் ஐந்நூறு தெனாரியமும் மற்றவர் ஐம்பது தெனாரியமுமாக இருவர் கடன்பட்டிருந்தனர். கடனைத் தீர்க்க அவர்களால் முடியாமற்போகவே, இருவர் கடனையும் அவர் தள்ளுபடி செய்துவிட்டார். இவர்களுள் யார் அவரிடம் மிகுந்த அன்பு செலுத்துவார்?” என்றுகேட்டார். சீமோன் மறுமொழியாக, ”அதிகக் கடனை யாருக்குத் தள்ளுபடி செய்தாரோ அவரே என நினைக்கிறேன்” என்றார். இயேசு அவரிடம், ”நீர் சொன்னது சரியே” என்றார். பின்பு அப்பெண்ணின் பக்கம் அவர் திரும்பி, சீமோனிடம், ”இவரைப் பார்த்தீரா? நான் உம்முடைய வீட்டிற்குள் வந்தபோது நீர் என் காலடிகளைக் கழுவத் தண்ணீர் தரவில்லை இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தமது கூந்தலால் துடைத்தார். நீர் எனக்கு முத்தம் கொடுக்க வில்லை. இவரோ நான் உள்ளே வந்ததுமுதல் என் காலடிகளை ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டே இருக்கிறார். நீர் எனது தலையில் எண்ணெய் பூசவில்லை. இவரோ என்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார். ஆகவே நான் உமக்குச்சொல்கிறேன் இவர் செய்த பலபாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்புகூர்ந்தார். குறைவாக மன்னிப்புப்பெறுவோர் குறைவாக அன்பு செலுத்துவோர் ஆவர்” என்றார். பின்பு அப்பெண்ணைப் பார்த்து, ”உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார். ”பாவங்களையும் மன்னிக்கும் இவர் யார்?” என்று அவரோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள். இயேசு அப்பெண்ணை நோக்கி, ”உமது நம்பிக்கை உம்மை மீட்டது. அமைதியுடன் செல்க” என்றார்

**தியானம்:** இன்றைய நற்செய்திக்கமைவாக பாவியான பெண்ணின் முன்மாதிரிகையைச் சுட்டிக்காட்டி எமது வாழ்வில் பாவ மன்னிப்பு வழங்க எப்போதும் தயாராக இருக்கின்ற இறைமகன் இயேசுவைச் சந்திக்கின்றோம். அதே வேளையில் எமது பாவங்களின் தன்மையால் எமக்கு ஏற்படும் விரக்தி உணர்வால் நாம் உள்வாங்கப்பட்டு இறைமகனின் இரக்கப் பெருக்கத்தை உணராது வாழக்கூடாது என்ற உண்மையையும் வேறு விதமாக எமக்குப் படிப்பிக்கப்படுவதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனினும், எல்லாம் வல்லவரான எமது ஆண்டவர் இயேசு பாவங்களை வெறுத்து பாவிகளை அதிகமாக நேசிக்கின்றார் என்பதனை இன்றைய நற்செய்தி மூலமாக உணர்த்துகின்றார். இறைமகன் இயேசுவின் காலத்தில் விஞ்ஞான நாகரீக முன்னேற்றம் அடையாத காலத்தில் வாழ்ந்த படிப்பறிவற்ற, பாவியான அப்பெண் எவ்வித கூச்சமோ, அவமானமோ இல்லாது ஆண்டவர் பாதத்தை தனது கண்ணீரால் கழுவி நறுமணத் தைலம் பூசி தனது கூந்தலால் துடைத்துத் தனது பாவங்களுக்குப் பரிகாரம் பெறுகின்றாள். எமது பாவநிலை குறித்து எமக்கும் இறைவனுக்கும் மாத்திரமே தெரியும். எனினும், இன்றைய நற்செய்தியில் கூறப்படும் பெண் போன்று எம்மால் பகிரங்கமாக பாவப்பரிகாரம் செய்ய முடிகின்றதா? மாறாக, அடுத்தவரது தவறுகளைச் சுட்டிக்காட்டி மற்றவர்களை கேவலப்படுத்தி நாம் நல்லவர்கள் என நிரூபித்து வாழ்வதிலேயே நாம் முன்னுக்கு நிற்கின்றோம். எனவே, நாம் பாவ மன்னிப்பு அடைய எவ்விதமான பாவப் பரிகாரங்களைச் செய்யவேண்டும் என அறிவதில் ஆர்வம் காட்டுவோம். எமது மறைவான வாழ்விலே நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழுகின்றோம் என்பது ஆண்டவர் இயேசுவிற்கு நன்கு தெரியும். அதற்காகவே அவர் ஏற்கனவே சிலுவை மரத்தில் தமது இனிய உயிரையே பலியாக ஒப்புக்கொடுத்துள்ளார் என்ற உண்மையை விசுவசித்து ஏற்றுக்கொண்டு தகுந்த பாவப்பரிகாரமான ஒப்புரவு அருட்சாதனத்தை நல்ல மன உணர்வோடு பெற்றுக்கொண்டு உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு முன்வருவதோடு “என் இறைவன் நீரே! உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்” என்று அனுதினமும் செபிக்கின்ற கத்தோலிக்க விசுவாசிகளாக எமது வாழ்வை மாற்றியமைப்போம்.